# 13. காரைக்காலம்மையார் பாடல்கள் சுட்டும் இசைக்குறிப்புகள் ஓர் சமய இசையியலாய்வு

முனைவர் சுகன்யா அரவிந்தன்
விரிவுரையாளர், இசைத்துறை
யாழ்ப் பல்கலைக்கழகம்
இலங்கை

## ஆய்வுச் சுருக்கம்

தமிழ்ப்பண்பாட்டு மரபிலே கலைகளும் சமயமும் மிகவும் இறுக்கமான பிணைப்பினைக் கொண்டிருப்பதை வரலாறுகள் வாயிலாகத் தெரிந்து கொள்கின்றோம். காலங்காலமாக நிகழ்ந்து வரும் சமய மறுமலர்ச்சியிலே எல்லாப்படி முறைகளிலும் சைவமும் கலையும் ஒன்றில் ஒன்று சார்ந்து வளர்ந்திருப்பதைக் கண்டுக்கொள்ள முடிகின்றது. இந்த வகையிலே சைவத்தின் பொக்கிசமாகத் திகழ்கின்ற தேவார முதலிகளுக்கு முதன்மையாக வைத்தெண்ணப்படும். காரைக்காலம்மையார் அவர்களுடைய பாடல்களில் இசை சார்ந்த குறிப்புகளை இனங்கண்டு வெளிப்படுத்தும் நோக்கிலே இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்படுகின்றது.

## திறவுச்சொற்கள்

பண், கானகாலம், இசைரூபம், இசைக்கருவிகள், இசையனுபவம்.

## அறிமுகம்

காரைக்காலம்மையார் அவர்கள் கி.பி. 5ம் நூற்றாண்டு காலப்பகுதியிலே வாழ்ந்தவர் என்பதும் தேவார முதலிகளுக்கு மூத்தவர் என்பதும் பொதுவாக வரலாற்றாய்வாளர்களால் ஒத்துக்கொள்ளப்பட்ட கருத்தாகும். இவர் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் போன்ற பிரபந்தங்களைப் பாடியுள்ளார்.

இயல், இசைத் தமிழ்பாடலாகிய இவரது திருப்பதிகங்கள் பக்தியிலும் சித்தாந்தத்திலும் சிறந்து விளங்கும்

அதே வேளை தமிழிசை, இசைசார் வடிவங்கள், அவைப் பற்றிய நுணுக்கங்கள் என்பன பற்றியும் மிகத் தெளிவான விளக்கங்களைத் தருவனவாகவும் அமைகின்றன. இது தமிழிசை வளர்ச்சிக்குப் பலம் சேர்த்தது என்றால் மிகையில்லை. இத்தெய்வீகப்பாடல்கள், இசையிலக்கணங்களை முற்றும் அறிந்து, இசை நயத்தோடு தாளக் கூறுகளையமைத்து, எல்லையற்ற கற்பனை நயத்துடன் பாடக்கூடியவையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. பண்ணியல் வரன் முறைகளுக்கமையவும், அம்மையாரது பாடல்களின் இசையியல் மரபானது வகுக்கப்பட்டுள்ளமை நுணுகிப் பார்க்கும் போது தெளிவாகின்றது. (கர்நாடக இசையியலாளர்கள் இராகங்களை அவற்றின் தன்மைக்கேற்ப பாடப்பட வேண்டிய காலங்கள் குறித்து வரையறை செய்திருக்கின்றார்கள். இது இந்த இராகத்தின் கானகாலம் எனப்படும்)

ஏழிசையாய் இசைப்பயனாய் நிற்கும் இறைவனோடு லயப்படுவதற்கு இசை பெரிதும் பயன்படுவதை அம்மையார் அவர்கள் அனுபவித்து உணர்ந்து தான் இன்பமுற்றதன் வழி சமூகத்தையும் பக்தி இசையின் பேரனுபவத்திற்கு வழிப்படுத்தியிருக்கின்றார் என்று சொல்லமுடியும்.

அம்மையாரின் பாடல்களின் வழி இறைவனை இசையால் அர்ச்சித்து வழிபட்டிருப்பதையும் இறைவனையே இசையாகக் கண்டு அனுபவித்தவாறையும் புரிந்து கொள்ளமுடிகின்றது. இது மட்டுமல்லாமல் இசையியல் பண்புகளையும், நுணுக்கங்களையும் விளக்கி நிற்கின்ற ஒரு இசையியல் பொக்கிசமாகவும் இவரது பாடல்களை நோக்க முடியும். இந்த வகையிலே இசைபாடி இறைவனைத் துதிக்குமாற்றினையும் அதற்கான பாடல்களிலே விளக்கப்பட்ட இசையிலக்கணங்கள் பற்றியும், இசைக்குறிப்புகள் பற்றியும் குறிப்பாக நோக்குவதாக இவ்வாய்வு கட்டுரை அமையும்.

மேற்குறிப்பிட்ட இசையியல் சார் பகுதிகளை இனம் கண்டு வெளிப்படுத்தி நிற்கும் முயற்சியாகவே இவ்வாய்வு அமைகின்றது. மேலும் காரைக்காலம்மையார் அவர்கள்

இசையியலை எவ்வாறெல்லாம் கையாண்டிருக்கின்றார் என்பதனை இனங்கண்டு தெரிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் இவரின் வழி பின்வந்த தேவார முதலிகளது திருமுறைகளிலே இந்தக் கருத்து நிலையிலே நின்று ஆய்வுகளை முன்னெடுப்பதற்கு இந்த ஆய்வுக்கட்டுரை ஒரு முன்னாய்வாக அமையும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

## தமிழ்ப் பண்பாட்டில் இசை

தமிழ்ப் பண்பாட்டிலே இறையும் கலையும் ஒன்றுவொன்று இணைந்து இயங்குபவை. இறைவனை வழிபடுவதற்குப் பல வழிமுறைகளைக் கைக்கொண்டாலும் இறைவனுக்குப் பிடித்ததும், இலகுவானதும் அவன் புகழ் பாடுவதாகும். சிறப்பாகக் குறித்துச் சொல்லப்படுகின்றது. இசையால் இறைவனையே வசப்படுத்தமுடியும் என உணர்ந்து இசையால் இறைவனைப் பாடிப் பரகதி பெற்ற பலரைத் தமிழ்ப்பண்பாட்டு வரலாற்றிலே கண்டுகொள்ள முடிகின்றது. இந்த வகையிலே அம்மையார் அவர்களும் அடங்குகின்றார்கள்.

இறைவனைப் போற்றிப் பாடும் போது இசையைப் பல வழிகளிலே இறைவனோடு தொடர்புபடுத்தி இருப்பதை இவரது பாடல் வரிகள் மூலமாக இனம் கண்டுகொள்ள முடிகின்றது. இந்த வகையிலே இவ்வழிமுறைகளை மூன்று விதமாக வகுக்கலாம். காரைக்காலம்மையாரைப் பொறுத்த வரையிலே சுடுகாட்டிலே நின்றாடும் இறைவனைப் பேயுருவிலிருந்து கண்டு வழிபட்டாலும் கூட இசையியலின் அடித்தளத்திலே நின்று பாடல்களை யாத்திருப்பது இசை மரபிற்கு அம்மையார்கள் செய்த திருத்தொண்டாகக் கருதிக்கொள்ள முடிகின்றது. அந்த வகையிலே,

1. இறைவன் ஆடுவதற்காகப் பாடித் தொழுவது.

2. அல்லும் பகலும் இசை பாடிப் பாடி இறைவனை வழிபடுவது.

3. பாடலோடு பக்தி மாத்திரமல்லாமல் இசைக்கலையின் சிறப்பு. இசைக்கருவிகள், அதன் பண்புகள், ஏழு சுவரங்கள், அவற்றின் நிலைகள் எனப் பல இசை சார்

குறிப்புகளையெல்லாம் காரைக்காலம்மையார் அவர்களது பாடல்களிலே ஏராளமாகக் கண்டுகொள்ள முடிகின்றது.

## இறைவன் ஆடுவதற்காக பாடித் தொழுவது

திருவாலங்காட்டிலே இறைவனாட அம்மையவர்கள் இறையடியிருந்து அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க என்று வேண்டி இறையருள் பெற்ற நித்திய சுகமடைந்தார் என்பது புராணம். எனவே இறைவனின் ஆடலுக்கான பாடல்கள் பற்றித் தனது பதிகங்களிலே குறித்துச் செல்கின்றார். அம்மையார் அவர்களது பாடல்களிலே திருவாலங்காட்டு மூத்த திருப்பதிக வரிகள் பின்வருமாறு உணர்த்துகின்றன.

''முந்தி அமரர் முழவின் ஓசை திகைத்து
அச்சிலம்பு ஆர்க்க ஆர்க்க''

''கொட்ட முழவங் கூவிப்பாட குழகன் ஆடுமே''

''ஒப்பினை இல்லவன் பேய்கள் கூடி ஒன்றினை ஒன்றடித் தொக்கலித்துப் பப்பினை யிட்டு பகண்டை யாடப் பாடருந் தந்தரி யாழ் அமைப்ப அப்பனை அணி திரு ஆலங்காட்டுன் அடிகள் என்றும் பாடியிருக்கின்றார்.

அதாவது திருவாலங்காட்டுச் சுடுகாட்டப் பேய்களின் பாடலுக்கு இறைவன் ஆடுவதாகத் தனது பாடல்களிலே அம்மையாரவர்கள் விவரித்துச் செல்வதைக் காணமுடிகின்றது. இசைக்கலையின் சிறப்பு, இசைக்கருவிகள் இதன் பண்புகள், சப்த சுவரங்கள் பற்றிய குறிப்புகள்.

அம்மையாரது திருப்பதிகங்களிலே பண்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுவது போல இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகளும் விரவிக்காணப்படுகின்றன. இசை எனப்படுவது மிடற்றிசை. கருவியிசை என இரு பிரிவுகளாக அவை தோன்றும் அடிப்படையிலே பகுத்து நோக்கலாம். மிடற்றினால் தோற்றுவிக்கப்படுவது மிடற்றிசை எனவும் கருவியினால் கருவியிசை எனவும் குறிப்பிடப்படும். இசையின் தோற்றம் மூலம் வேறுபாடினும் இதற்குரிய இயல்பு, பண்பு யாவும் ஒன்றே.



CS CamScanner

இதனை முற்றுமுணர்ந்த அம்மையார் அவர்கள் தமது பாடல்களிலே இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகளையும் சப்த சுவரங்கள் பற்றிய விவரங்களையும் இணைத்துக் கொள்ளத் தவறவில்லை. அம்மையாரது மூத்த திருப்பதிகத்திலே,

''பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பாறைபோல விழி கட்பேய்
கொட்ட முழுவம் கூழி பாடக் குழகன் ஆடுமே''

என்றும், அதாவது பரமன் ஆடல் செய்யும் ஆலங்காட்டிலுள்ள பேய்களது கண்களைப் பறை என்கின்ற இசைக்கருவிக்கு அம்மையார் ஒப்பிடுவது இசையின்பால் அவர் கொண்டிருக்கின்ற ஈடுபாட்டினைக் காட்டி நிற்கின்றது.

''வாளைக் கிளர வளைவாள்...
கூளிகணங்கள் குழலோடியம்பல் குழகன் ஆடுமே''

அதாவது காட்டிலுள்ள கணங்களின் குழலிசைக்கு இறைவன் ஆடுகின்றான் என்றும்,

''முந்தி அமரர் முழவின் ஓசை முறைமை வழுவாமே
அந்தி நிருத்தம் அனல்கை ஏந்தி அழகன் ஆடுமே''

அதாவது முழவின் ஓசை ஆடலுக்குரிய வரன்முறைகளோடு ஒலிக்க அக்கினியைக் கையிலேந்தி இறைவன் ஆடுகின்றார் என்றும்,

''கடுவன் உகளுங் கழைசூழ்...
கொடு வெண்மரவும் பிறையுந் ததும்பக் கொள்ளென்சைபாடப்
பாடுவெண் துடியும் பறையும் கறங்கப் பரமன் ஆடுமே''

அதாவது இறைவன் பறை, துடி என்கின்ற இசைக்கருவிகளாது ஓசைக்கேற்ப ஆடுவதாக அம்மையார் இறைவனின் ஆடலை விபரித்து நிற்கின்றார்.

## முடிவுரை

தொகுத்து நோக்கும் போது இறைவனை வணங்கி



CamScanner

அதன்வழி அருட்பேறுபெறல் என்பதே அம்மையாரது ஒரேநோக்காக இருந்தாலும் இறைவன் இசைக்கு இசைபவன் என்கின்ற தமிழ்மரபுக் கோட்பாட்டைப் புரிந்து கொண்டமையால் இவர் இறைவனைக் கலைஞனாகப் பார்த்தார். இதன் வெளிப்பாடாக இறைவனை இசையில் இருப்பிடம் காப்பிடம் என்று பல இடங்களிலும் இவரது பாடல் வரிகள் நமக்குணர்த்தி நிற்கின்றன.

இது தவிர இந்த ஆய்வுக்கட்டுரை வாயிலாக இசைக்கலையினை மூன்று விதமாக இறைவனோடு தொடர்புபடுத்தி பக்தியுடன் தமிழிசைக்கும் வளம் சேர்த்திருக்கின்றனர் என்பது அம்மையார் அவர்களது பாடல்களிலே தெளிவாகக் காணமுடிகின்றது.

இறைவனையே கலைஞனாகக் கண்டின்புறுவதாகவும் இசை பாடி இறைவனை வழிபடுவதாகவும், இசைக்கருவிகள் இசைப்பது, பாடுவது இதன்வழி இறைவனைத் துதிப்பது என்கின்ற மூன்று விதமான வழிகளிலே இசைக்கலையினை நாயன்மார்கள் தேவாரங்களிலே தொடர்புபடுத்தியிருக் கின்றார்கள் என்பது இந்த ஆய்வு முயற்சியின் வாயிலாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது.

மேலே இத்தரவு அம்மையாரின் வழிதொடர்ந்த ஒவ்வொரு நாயன்மார்களது பாடல்களையும் தனித்தனியே ஆராயவும் ஒவ்வொரு திருமுறைகளையும் இசையியல் தளத்திலே ஆராய்ந்து விரிவாக நோக்குவதற்கான ஒரு அறிமுகத்தையும் தரவல்ல கட்டுரையாக அமையும் என்பதில் ஐயமில்லை.



CamScanner